தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.5.2025) திருவள்ளூர் மாவட்டம் ஈக்காடு கண்டிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் கீழ் திருவள்ளூர் புறவழிச்சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30.10 கி.மீட்டர் நீளத்திற்கு புதிய ஆறு வழிச்சாலை மற்றும் சாலையின் இருபுறமும் இரு வழித்தடத்தினை கொண்ட சேவைச் சாலை அமைத்தல் பணிகளை தொடங்கி வைத்து, சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் புகைப்படங்களை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, வி.ஜி.இராஜேந்திரன். எஸ். சந்திரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர். இரா.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், ஆகியோர் உடனிருந்தனர்.

ரூ.600 கோடி மதிப்பில் வைகை ஆற்று தண்ணீர் திண்டுக்கல்லுக்கு வரும் திட்டத்தை திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குடிநீர் திட்டத்தை தொடங்கி வைப்பார் என்று ஆலமரத்துப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற மே1 சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்ததோடு பழரசங்களை வழங்கி வாழ்த்தினார். அருகில் மாவட்ட ஆட்சியர் சரவணன், ஒன்றியச் செயலாளர்கள் முருகேசன், ராமன் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

பதிவுத்துறைக்கு

ஒரே நாளில் 272.32 கோடி ரூபாய் வருவாய்!

அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!

சென்னை, மே 3 - பதிவுத்துறைக்கு ஒரே நாளில் ரூபாய் 272 கோடியே 32 லட்சம் வருவாய் கிட்டியுள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

30.4.2025 புதன்கிழமை அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன.

பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று 30.4.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு

100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்குபதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டது.

2024-25 ம் நிதியாண்டில் கடந்த 10.2.2025 அன்று ஒரே நாளில் 23,421 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.237.98 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2025-26 ம் நிதியாண்டில் இதற்கும் அதிகமாக 3042025 அன்று ஒரே நாளில் 27,440 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.272.87 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் இதுவரை இல்லாத அளவில் அதிக வசூல் செய்து புதிய மைல்கல்லை பதிவுத்துறை எட்டியுள்ளது என வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
04.05.2025 ஞாயிற்றுக்கிழமை	மாலை 4.00 மணி	விருதுநகர் வடக்கு	இராஜாமணி அம்மாள் திருமண மண்டபம், மல்லாங்கிணர்.
06.05.2025 செவ்வாய்க்கிழமை	காலை 9.00 மணி	சிவகங்கை	ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

திருவள்ளூர் மத்திய மாவட்ட அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர், மே 03;- திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோ சனை கூட்டம் 04-05-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் ஆவடி காவல் ஆணையர் அலுவலகம் எதிரில் உள்ள கோல்டன் கிறிஸ் ஹாலில் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையில் நடை பெறுகிறது.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ. கிருஷ்ணசாமி. தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில தொழிலாளர் அணி செயலாளர் பூவிருந்தவல்லி தொகுதியின் பார்வையாளர் திரு PTC செல்வராஜ், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் ஆவடி தொகுதி பார்வையாளர் செல்வி நிவேதா ஜெசிகா மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.

ராஜேந்திரன், ஜி.விமல் வர்ஷன், எம். முத்தமிழ்செல்வன், வி. குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்

அது சமயம் ஆலோசனை கூட்டத்திற்கு மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர் கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி இந்நாள் முன்னால் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

பொருள் ; 03-05-2025 அன்று நடைபெறும் மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் விவாதிக்கும் பொருள் குறித்து

ஜீன் 3 அன்று முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் கொண்டாடுவது குறித்து மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொண்டார்

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

அன்னம் தரும் அமுதகரம் 72வது நாள்!

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கினர்!

சென்னை, மே. 3- சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 72வது நாள் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி -இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி, சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், பகுதி கழகச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் ஆகியோர் உணவு வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 72 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்

னிட்டு நேற்று (02.5.2025) - திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 72- பிரைட்டன் சாலை, கன்னிகாபுரம் (அரசு ஆதி திராவிடர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில்), சென்னை. 2) வட்டம் 72 அ - 2 வது தெரு, புளியந்தோப்பு (மு.க டாக்டர் கலைஞர் நற்பணி மன்றம் அருகில்), சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி, சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், பகுதி கழகச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் ஆகியோர் எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் இசட். ஆசாத், புனிதவதி எத்திராஜன், எம் சரவணன், பி உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, பரிமளாசுரேஷ்பாபு, மா. ருத்ரமூர்த்தி,எஸ் புஷ்பராஜ், ஜி. கிருஷ்ணகுமார், எம். இசட். அபாய். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே. ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். திரு.வி.க.நகர் வடக்கு/தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ் பாபு, மா.ருத்ர மூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம். தமிம், பொல்லு டி.சுரேஷ் குமார்,வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

மாநில தொழிலாளர் அணி சார்பில் மே தின விழா கருத்தரங்கம் மற்றும் நலிவடைந்த தொழிலாளர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி. கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு, அமைப்பு இணைச்செயலாளர் அன்பகம் கலை, துணைச் செயலாளர் எஸ். அகஸ்டின் ஆகியோர் நலிவடைந்த தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்கினர். இதில் மாநிலத் துணைச் செயலாளர்கள் பி.டி.சி. பாலு, ராஜாகுப்புசாமி, முனைவர் ஆர்.வரதன், எம்.ராஜகாந்தம், பெரம்பூர் த. ஆறுமுகம், சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் எம். டி.ஆர். சாரதி மணிமாறன், தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் ப.செந்தில் குமார், சுரேஷ்பாபு, எல்.சம்பத்குமார், நாகூர் கனி, தினகரன், சீனு, அன்னைசீனு மற்றும் சென்னை மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் எ. எழமலை, நா. நாகராஜ், என். கோவிந்தன், ப. கோபிகிருஷ்ணன், எஸ். ரமேஷ், சொ.புலான்ராஜ், விக்டர் ஞாணமணி, மதிபாபு, போக்குவரத்து கழக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வி.எஸ்.எஸ். மணி
மே 2 (1970)

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து திராவிட இயக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டு, கழகம் துவங்கிய பின்னர், மதுரை மாவட்டத்தில் கழகம் வலிவுடன் வளர காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராய் திகழ்ந்தவர்.

விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1962 மற்றும் 1967 ஆகிய தேர்தல்களில் ஆத்தூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.

"கழக வளர்ச்சியில் பங்கேற்று நெசவாளர்களின் துயர்துடைப்பிற்கு அரும்பணியாற்றியவர்" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.